இந்தியா ஒரு நாடல்ல—உபகண்டம்!

திராவிடநாடு

மலர் 9	15—10—50	இதழ் 17

இலங்கை 15 சதம்] [விலை அணா இரண்டு

சி. என். ஏ.—இந்தித் தூதுகோஷ்டி சந்திப்பு

பிரிவினையே எங்கள் ஆசை

வசதிகளுண்டு - வாழமுடியும்!

திராவிட நாடுபற்றி விளக்கம்

பார்ப்பனர் பிரச்சினை குறித்தும் தகவல்

இந்தி நல்லெண்ணத் தூதுக் குழுவினர் 11-10-50 காலை 9 மணிக்கு திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் சி. என். ஏ. அவர்களை காஞ்சி 'திராவிட நாடு' அலுவலகத்துக்கு வந்து சந்தித்தனர். மேற்படி சந்திப்பு ஒரு மணி நேரம் நடைபெற்றது.

மேற்படி தூதுக் குழுவினர், தென்னாடு வந்ததும் நம்மைப்பற்றிய தப்புக் கருத்துக்களைப் பரப்பும் காங்கிரஸ் மந்திரிகளை முதலில் கண்டதால், நமது முக்கிய இலட்சியங்களை அவர்கள் அறிந்துகொள்ள முடியாது. தப்புக் கண்களோடேயே நம்மைச் சந்திப்பர் என்ற முடிவில் தி. மு. க. பொதுச் செயலாளர், அவர்களைச் சந்திப்பதில்லையென முடிவு செய்தார். அம்முடிவை 8-ந் தேதி சென்னை நுங்கம்பாக்கத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பகிரங்கமாகவும் அறிவித்துவிட்டு, காஞ்சிக்குத் திரும்பினர்.

இந்நிலையில் 10-10-50 இரவு 7 மணிக்குத் திடீரென மேற்படித் தூதுக் குழுவின் அந்தரங்க காரியதரிசியும் இன்னும் இரு உறுப்பினர்களும் பொதுச் செயலாளர் வீட்டிற்கு வந்து, தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டதோடு, 'உங்களது கருத்துக்களைத் தெரிந்துகொள்ளும் ஆசையோடு இங்கு வந்துள்ளோம். எப்பொழுது உங்களுக்கு சவுகரியமாயிருக்கும். தயவுசெய்து தெரிவிக்கலாமா?" என்றனர்.

நேரமாக வந்துவிட்ட காரணத்தால், பொதுச் செயலாளர், "நான் இதை எதிர்பார்க்கவில்லை. எனினும் நாளைக் காலை 9 மணிக்கு எனது அலுவலகத்தில் சந்திப்போம்" என்று தெரிவித்தார்.

அதை யொட்டி மேற்படி தூதுக் குழுவினரான, அலகாபாத் இந்தி சாகித்ய சம்மேளனத் தலைவர் சந்திரபள்ளி பாண்டே, லக்னௌ—மகிள வித்யாலயபிரின்சிபால் தோழியர் காஞ்சனலதா சபர்மாலா, ஐக்கிய மாகாண சட்டசபை உறுப்பினர் பாபா ராகவதாஸ், காசி இந்து பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பண்டிட் சீதாராம் சதுர்வேதி, சென்னை தட்சிண பாரத இந்திப் பிரச்சார சபைத் தலைமையாசிரியர் பால் சந்திரா ஆப்டே, ஆகியோரும் மேற்படி குழுவின் அந்தரங்கக் காரியதரிசியான காசி – ராணி கல்லூரி ஹாஸ்டலைச் சேர்ந்த சந்திரகாந்தரும் குறிப்பிட்ட நேரத்திற்கு அலுவலகத்துக்கு வந்தனர். வந்தோரை பொதுச்செயலாளர் வரவேற்றார்.

உரையாடல்

சதுர்வேதி:— எங்கள் தூதுக் கோஷ்டி அரசியல் சார்பற்றது. சமாதானம் நட்பு ஆகியவைகளைப் பலப்படுத்தும் நோக்கத்துடனேயே வந்திருக்கிறோம். தாங்கள் இந்தி மொழி பரவுதல் கூடாது என எதிர்ப்பதாகக் கேள்விப்பட்டோம். இந்தி—ஆரியமொழி என்று தாங்கள் கூறுவதாகவும் அறிந்தோம். பல மொழிச் சேர்க்கையால் உருவான மொழியே இந்தியாகும். இதுவே பொதுமொழியாக இருக்கும் நிலையிலிருப்பது என்று கருதுவதோடு, இந்திப் பொதுமொழியாக இருக்க அருகதையுள்ளதென்று திடமாக நம்புகிறோம், ஆனால் தாங்கள், அது கூடாது என எதிர்ப்பதாகவும், அதற்கு முக்கிய காரணமாக 'இந்தி ஆரிய மொழி' என்று கூறுவதாகவும் கேள்விப்பட்டோம். ஆகவே இது பற்றிய தங்கள் கருத்துக்களை அறிய விரும்புகிறோம்.

சி. என். ஏ. :— மகிழ்ச்சி. ஆனால், துரதிர்ஷ்டவசமாக, யார் எங்களைப் பற்றி தப்பாகப் பிரச்சாரம் செய்கிறார்களோ அவர்களை நீங்கள் முதலில் சந்தித்திருக்கிறீர்கள்!

சதுர்வேதி:— இல்லை, இல்லை! அப்படி நினைக்காதீர்கள்.

சி. என். ஏ:- நாங்கள் அரசியல் காரணங்களுக்காகவே எதிர்ப்பதாகவும், பார்ப்பனதுவேஷத்தால் எதிர்ப்பதாகவும் தங்களிடம் மாதவ மேனன் போன்றோர், தப்பாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்தி திணிக்கப்படவேண்டாம் என்று கூறுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. இந்தியா, சுதந்திரம் அடைவதற்கு முன்னமே, நாங்கள் இந்தியை எதிர்த்திருக்கிறோம். கட்டாய இந்தி கூடாது என்று கிளர்ச்சி செய்திருக்கிறோம்.

தேசிய மொழியாக இருக்கவேண்டும் என்று இந்தியைப் புகுத்துபவர்கள் காரணம் சொல்கிறார்கள். அந்தக் காட்டியே இராஜகோபாலாச்சாரியார், இந்தியைக் கொண்டு வந்தார். அப்போது நாங்கள் எதிர்த்தோம்—பலன் பெற்றோம். அதற்குள்ள காரணம், எங்கள் குழந்தைகள் தாய்மொழி தமிழ், அகில உலக மொழி ஆங்கிலம், இந்தி ஆகிய மூன்று மொழிகளைக் கற்கவேண்டிய கஷ்டத்திற்கு ஆளானார்கள்.

அதோடு, எங்கள் மொழி எல்லோரும் போற்றும் ஒரு சிறந்த மொழி. இலக்கிய வளமும், சிறந்த அழகும் வாய்ந்தது. இன்னொரு மொழி கட்டாயமாக எமீது திணிக்கப்பட்டால் தனிப்பெருமையுடைய எங்கள், தாய்மொழி தள்ளப்படும்.

இந்தி அழகுள்ளதல்ல, இலக்கிய வளம் கொண்டதல்ல என்று தங்கள் போன்றோரே ஒப்புக்கொண்டுள்ளீர்கள். ஆகவே, அத்தகைய ஒரு மொழி—எங்கள் மீது ஏன் சுமத்தப்படவேண்டும்?

எங்கள் எதிர்ப்புக்கு அரசியல் ரீதியிலும் ஆட்சேபங்கள் உண்டு.

இந்தி, அரசாங்க மொழியாகவேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள். அதாவது இப்போது ஆங்கிலத்திற்கு இருக்கும் இடம் இந்திக்கு இருக்கவேண்டுமென்று கருதுகிறீர்கள். இதை, எங்களால் ஒப்பமுடியாது.

இந்தி தேவையென்றால், வேண்டுமென்பவர்கள் அதைக் கற்றுக்கொள்ள விரும்புவதில் எங்களுக்கு ஆட்சேபமில்லை. ஆனால் அது அரசாங்க மொழி என்று வலியுறுத்தப்படுவதில், வேறு அர்த்தம் தொனிக்கிறது.

இந்தியா, ஒரே நாடு என்ற எண்ணத்திலேயே இந்தி மொழி ஆதரவாளர்கள் அரசியல் மொழியாக வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

காஞ்சனலதா:- அப்படியென்றால், இந்தியா ஒரு நாடில்லையா?

சி. என். ஏ:- இல்லை சகோதரி! இந்தியா ஒரு நாடல்ல—ஒரு உபகண்டம்!! பல இனங்கள் வாழும் ஒரு பரந்த நிலப்பரப்பு. இங்கே, ஒரே ஆட்சி நிலவுவதென்பது முடியாது. அதேபோல, ஒரே மொழி, அரசாங்க மொழியாவதும் இயலாது.

இந்த இடத்தில் உங்களுக்கு ஒன்று கூற விரும்புகின்றேன். வியாபார விஷயங்களுக்கோ அல்லது வேறு எந்தவித தொடர்புக்காகவோ, இந்தி வேண்டுமென்று கருதுபவர்கள் இந்தியைத் தெரிந்துகொள்வதில் எங்களுக்கு ஆட்சேபமில்லை.

ஆனால், அது அரசாங்க மொழியென்று கூறப்பட்டு, இந்த உபகண்டத்திலுள்ள எல்லா மக்களும் கற்றுக்கொள்வது அவசியம் என்று வலியுறுத்தப்படுவதை நாங்கள் ஒப்ப முடியாது. இந்தியா ஒரு நாடல்ல.

(5-ம் பக்கம் பார்க்க)

"திராவிட நாடு" தினசரி இதழ்

ஆளவந்தாரின் 'வரவேற்புபசாரம்'!!

ரூ 1000 ஜாமீன் வேண்டுமாம்!

"திராவிட நாடு" தினசரி இதழைச் சென்னையிலிருந்து துவக்குவதற்கும், "வான்கார்ட்" (Vanguard) என்ற பெயரில், புது அச்சகம் துவக்குவதற்கும், சி. என். அண்ணாதுரை அனுமதி கோரியிருந்தார்.

ரூபாய் 1000 ஜாமீன் தொகை (Security) கட்டினால் அச்சகத்துக்கும், தினசரி இதழுக்கும் அனுமதி தரப்படுமென ஆட்சியாளர் அறிவித்திருக்கின்றனர்.

விரைவில் "திராவிட நாடு" தினசரி இதழ் வெளிவர முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. தினசரி இதழின் அலுவலகம் சென்னை, தங்கசாலைத்தெரு 202-ம் கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது.

தி. மு. க. மத்திய செயற்குழு கூட்டம்

பொதுச்செயலாளர் வேண்டுகோள்

திராவிட முன்னேற்றக்கழக மாகாண மத்திய செயற்குழுக் கூட்டம் 23—10—50 திங்கள் மாலை 4-மணிக்கு சென்னை—தங்கசாலைத் தெரு 202-ம் எண் உள்ள கட்டிடத்தில் நடைபெறும். பல முக்கிய அரசியல் பிரச்சினைகள் குறித்து ஆலோசிக்கப் படவேண்டியிருப்பதால், ஒவ்வொரு செயற்குழு உறுப்பினரும், தவறாது வந்திருந்து கலந்துகொள்ளுமாறு அழைக்கிறேன். இதையே உறுப்பினர்கள் அழைப்பாகக் கருதுமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்.

202, தங்கசாலை தெரு
சென்னை.

அண்ணாதுரை.
பொதுச் செயலாளர்,
திராவிட முன்னேற்றக் கழகம்.

கோபுரத்தில்--குப்பை மேடுகள்!

துவேஷம் வளர்ப்போரல்ல, நாம்!

உண்மை நிலை உணர்வீர்!

நாடு, 'மனிதபூமி'யாகட்டும்!

'ஜாதிகள்' உலவும் காடாகக் கூடாது

பூனை—புலியாகும் நேரம் இது!

புறப்பட்டு வாரீர்-புது 'உலகம்' காண!

சென்னையில் பொதுச் செயலாளர்

8—10—50 அன்று சென்னை நுங்கம்பாக்கம் வள்ளுவர் கழகச் சார்பில் சிறை சென்று நீங்கிய தி. மு. க பொதுச் செயலாளர் அண்ணாதுரைக்கு ஒரு மகத்தான வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. நுங்கம்பாக்கமே கண்டிராத அளவு பிரம்மாண்டமான மக்கள் கூட்டம் கூடியிருந்தது. மேற்படி மாபெரும் பொதுக் கூட்டத்திற்கு நுங்கம்பாக்கம் "நிலவு" அச்சக உரிமையாளர் தோழர் பூ. கணேசன் B. A. (Hons.) தலைமை தாங்கினார்.

'ஆரிய மாயை' குறித்தும், அரசியலார் போக்கு குறித்தும் திராவிட மாணவ முன்னேற்றக் கழக அமைப்பாளரும் சட்டக் கல்லூரி மாணவருமான தோழர் கே. எ. மதியழகன் B. A. வீர முழக்கமிட்டார். ஒலி பெருக்கிக் கோளாறு தொல்லை கொடுத்தும் அவரது குரலை, கூடியிருந்த மக்கள் அனைவரும் கேட்க முடிந்தது.

பிறகு சி. என். ஏ. பேச எழுந்ததும், பல கழகங்கள் சார்பிலும், தனிப்பட்டோர் மூலமும் ஏராளமான மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. வரவேற்பும் படித்தளிக்கப்பட்டது. அதற்குப் பதிலளித்து சி. என். ஏ., நாட்டின் பல பிரச்சனைகள் குறித்தும் விளக்கினார்.

மேற்படி மாபெரும் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரை பேசியதன், முக்கிய அம்சங்கள்:— "ஆரிய மாயையை எடுத்துக் காட்டினேன் என்பதற்காக, என்மீது பாய்ந்திருக்கின்றனர் சர்க்கார்! ஆரிய மாயை இலேசுப்பட்டதல்ல. நமது வாழ்விலேயே கலந்து, நமது வாழ்வையே சின்னாபின்னமாக்குகிறது. தொட்டிலிலே துவங்கி சுடுகாடு சென்ற பின்னரும்கூட, அது நம்மை விடுவதில்லை. அதன் விளைவாக சமுதாயத்தில் ஏற்பட்ட சாதி பேதங்கள், உயர்ந்தவன் தாழ்ந்தவன் வேற்றுமை, ஏராளம். அதன் காரணமாகவே, இந்நாட்டில் நாலரைக் கோடி மக்களிருந்தும் அவர்கள் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படவில்லை. மூடநம்பிக்கையும், பழமைப் பித்தும் நீங்கவில்லை. இரத்தக் கண்ணீர் வடிக்க வேண்டிய நிலையிலிருக்கிறது நாடு!

பிறநாடுகளிலெல்லாம் நாகரீக ஆராய்ச்சிகள் ஏராளமாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் நாம் எதைச் செய்துள்ளோம் இது வரை? அரிகேன் விளக்கு நாம் கண்டுபிடித்ததல்ல ஆனால் நம்மிடம் ஆகமம் இருந்தபடியே இருக்கிறது! சாஸ்திரம் பத்திரமாக இருக்கிறது — சாணைக் கல்லைக் கூட தேடி எடுக்கவில்லை! அப்போதிருந்த குத்து விளக்கு இப்போதும் இருக்கிறது. வண்டி வகையில் இரட்டை மாட்டு வண்டியைத் தவிர வேறெதிலும் முன்னேறவில்லை!

நாமோ பெரிய நாடு — ஆனால் நம்மைவிடச் சிறிய நாடுகள், கேற்று முளைத்த நாடுகள்,— — குறைவான தெய்வங்களிருக்கும் நாடுகள், கும்பாபிஷேகம் செய்யாத நாடுகள், அஷ்டோத்ரம் அறியாத நாடுகள், ஆறுமுகத்திலே அப்பனைக் காணாத நாடுகள்—எல்லாம் முன்னேறியிருக்கின்றன. இது ஏன்? எப்படி? இதை எடுத்துக் காட்டினால் தவறு? அறிவு வளர முட்டுக்கட்டையாக யிருப்பதை எடுத்துக் காட்டுவது தவறு?

பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் பிரச்சினை பற்றி பேசுகிறோம் என்றால் காரணம் வேற்றுமையை வளர்க்கவேண்டும் என்பதால் அல்ல. துவேஷம் எழுப்பப்பட வேண்டும் என்ற எண்ணத்தால் அல்ல இப்போது அந்தப் பிரிவுகளால் நீடிக்கும் துவேஷம் ஒழியவேண்டும், நாடு ஜாதிகளின் கூடாரமாக இருக்கக்கூடாது. மனிதர்கள் வாழும் இடமாக இருக்கவேண்டும் என்ற ஆசையால்தான்.

பகல் 12 மணி, பாதசாரி ஒருவன் நடந்து போய்க் கொண்டிருக்கிறான். தார் ரோடு, வெய்யில் கொடுமை சகிக்க முடியவில்லை. இந்நேரத்தில் வேகமாக ஒரு மோட்டார் அவனைத் தாண்டுகிறது. அதிலிருக்கும் கனவான் வேடிக்கையாக, வாயிலிருக்கும் வெற்றிலைப் பாக்கு எச்சலைத் துப்புகிறார். அது ஏழையின் துணியில் பட்டால் அவனுக்கு எப்படியிருக்கும்? பின்னால் திரும்பிப் பார்ப்பான் — கார் தன்னை விட்டுத் தாண்டிச் சென்று விட்டது என்றாலும், திரும்பிப் பார்ப்பான். இருவரும் ஒருவரை யொருவர் முன்பின் அறியமாட்டார்கள். இருவருக்கும் இதற்குமுன் குரோதமுமில்லை—விரோதமும் கிடையாது.

உயர்ந்த, உல்லாசமான நிலையில் சென்று கொண்டிருப்பவன் உமிழ் நீரைச் சிந்துகிறான். அது உழைப்பாளியின் மேல்படுகிறது. அவனது கிழிந்தத் துணிகளின்மீது விழுகிறது. நெருப்பு பட்டது போல, ஏழை துடிக்கிறான். இந்தக் கேவலத்தால் கோழையும் எரிமலையாகிறான்! தன் வாயில் வந்தபடி யெல்லாம் ஏசுகிறான்—ஆத்திரத்தால் கொதிக்கிறான்!

இதற்கு துவேஷம் என்று சொல்ல முடியும்? உல்லாசமாக வாழ்பவன், உழைத்து அலுப்பவனைக் கேவலப்படுத்தினால், மனம் புண்பட்டு அவன் துடிக்கிறான்! இதற்கா, துவேஷம், என்று பெயர்? வாழ்வில் வேதனைப்பட்டவன், தன் வாழ்க்கை வேதனை மயமான காரணங்களை எடுத்துச் சொல்வதா துவேஷம்?

எங்கள் இலட்சியம், கொசுவும் புழுவும் நெளிந்து வளையும் சாக்கடையைத் தூய்மைப் படுத்த வேண்டுமென்பதுதான். இதை ஏன், வேதனையாகக் கருதவேண்டும் சர்க்கார்?

உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற தத்துவார்த்தத்தைத் தகர்த்துத் துவேஷத்தை ஒழிப்பதுதான் எமது பணி. துவேஷம் ஒழியவேண்டுமென்பதே எம் நோக்கம்.

அதற்கான தொண்டை, சட்டம் அமைதி ஆகியவைகளுக்குட்பட்ட வகையில் செய்து வருகிறோம், சட்டம், சமாதானம் ஆகியவைகளின் அருமை இந்த 'ஆகஸ்டு தியாகி'களை விட எங்களுக்கு அதிகமாகத் தெரியும்! ஆகவே, நான் அதற்கு உட்பட்ட வகையில் எமது இலட்சியங்களைப் பரப்பிவருகிறோம் — பரப்பியும் வருவோம்.

இந்த சர்க்காருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன் அமைதிக்கும் சட்டத்துக்கும் பங்கம் விளைவிக்கும் வகையில் — நாங்கள் என்றும் நடந்து கொண்டதில்லை. இனியும் நடந்துகொள்ள மாட்டோம், எண்ணவும் மாட்டோம் உன்னிடம் நாணயம் இருக்கிற வரையில்!

நமது கழகம் வகுப்புகளை ஒழிக்கும் கழகம். மனிதர்கள் நாட்டில் நடமாடவேண்டும் என்ற ஆசை கொண்டதே நமது கழகம்.

நாம், ஆரியம் என்று குறிப்பிடுவது தனிப்பட்ட நபர்களையல்ல. நாம், ஆரியம் என்று சொல்வது ஜாதி பேதங்களை!

ஆரியம் என்று குறிப்பிடுவது, சனாதன சம்பிரதாயத்தை!

ஆரியம் என்று நாம் பேசுவது மனிதனை, மனிதன் ஏய்க்கும் தன்மையை!

ஆரியம் என்று நாம் அழைப்பது உயர்வு தாழ்வு கற்பிக்கும் தத்துவத்தை!

ஆரியம் என்று நாம் விளக்குவது 'அக்கிரகாரம் என்றும் சேரி என்றும் தனித்தனி பிரிவுகள், வளர்க்கப் படுவதை!

மேனி பளபளப்பு ஒரு இடத்திலும் — கருத்து சுருண்ட உடல் இன்னொரு இடத்திலும் இருப்பதை!

நாட்டுக்கு, கேடுசெய்து முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையிடும் மூடப்போக்கை!

அதைத் தவிர,

ஆரியம் என்று டி. ஆர். வெங்கட்டராம சாஸ்திரியை நாம் காட்டுகிறோமா? அல்லாடியைக் குறிப்பிட்டுச் சொல்கிறோமா? சீனிவாசய்யங்காரை அழைக்கிறோமோ?

நாம் சொன்னதில்லை. தனிப்பட்டவர்கள் மீது நாம் நமது ஆத்திரத்தைக் காட்டியதில்லை. காட்டக் கூடாது—அதனால் பலன் கிடையாது என்பதே நமது கருத்து. இதை இந்த சர்க்கார், உணரவேண்டும்!

நான் என்ன எழுதினேன் 'ஆரிய மாயை'யில்! பார்ப்பனீயம் பேராசை கொண்டது என்று குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் அதைவிட மோசமாகப் பாரதியார் கூறியிருக்கிறார்—

"பேராசைக் காரனடா—பார்ப்பான்!
பெரிய துரையென்னிலுடல் வேர்ப்பான்!"

இப்படிச் சொல்கிறார், தேசிய கவி பாரதியார். அவருக்கு மண்டபம் கட்டுகிறார்கள். ஏன், அவரைக் குற்றம் சாட்டக் கூடாது? நானென்ன அவரைவிட அதிகமாகவா எழுதிவிட்டேன்!

தைரியம், திறமை, அறிவிலே நம்பிக்கையிருக்குமானால் நான் 'ஆரிய மாயை' என்று தீட்டினால், 'ஆரிய மகிமை' என்று தீட்டுவதுதானே! கல்கியாரில்லையா, விகடரை விரும்பியழைத்தால் வரமாட்டாரா, தினமணி ஆசிரியர் முடியாதென்பாரா, மித்திரன் ஆசிரியர் வரமாட்டேன் என்று கூறிவிடுவாரா?

நான் தான் என்ன புத்தர்போல போதி மரத்தடியில் ஞானோதயம் பெற்றவனா? ஆண்டவன் அர்த்த ராத்திரியில் வந்து அருள் கூர்ந்ததால் எழுதக் கற்றுக் கொண்டவனா? ஆலவாயப்பர் வந்து எனக்கு அருள் கூர்ந்ததால் 'ஆரிய மாயை' தீட்டினேனா? அல்லது ஞானசம்பந்தனுக்கு, அம்மையின் ஞானப்பால் கிடைத்ததாமே—அது போலப் பெற்று, இந்த நூல் எழுதினேனா?

இல்லையே! — அப்படியிருக்கும்போது ஏன் இவர்கள், நான் எழுதினால், மறுப்பேடு தீட்டக் கூடாது? வக்கில்லையா, வழியில்லையா அல்லது வீரமில்லையா?

உள்ளத்தில் நல்லது என்று பட்டதை உரைக்க உரிமை இருக்கவேண்டும். இந்த உரிமை ஜனநாயக நாடுகளிலெல்லாம், அளிக்கப்படுவதாகும். இந்தஜனநாயகம் பெறவேண்டுமென்பதற்குத்தான் பகவத் சிங் தூக்கில் தொங்கியது! திருப்பூர் குமரன் தெருவை இரத்தத்தால் குளிப்பாட்டி விட்டு மாண்டது! வ. உ. சிதம்பரம் கப்பலோட்டியது—செக்கிழுத்தது! அந்த உரிமை, இன்று மறுக்கப்படுகிறது. குப்பை மேடுகள் கோபுரத்திலேறிவிட்ட காரணத்தால்!

விசுவநாததாஸ் என்று ஒருவர் இருந்தார் அவர் ஒரு பாட்டு பாடினார். அதை, வெள்ளையரசாங்கம், தடை செய்தது.

"கோக்கு பறக்குதடி பாப்பா!—வெள்ளை
கோக்கு பறக்குதடி பாப்பா!!"

என்பதுதான், அவர் பாடிய பாடலின் வரிகள். அதைத் தடுத்தது ஆங்கிலேய ஏகாதிபத்தியம் 'வெள்ளை' என்பது வெள்ளையரைக் குறிப்பிடுவதாக. அப்போது தேசியப் பத்திரிகைகள் யாவும் சிம்மநாதம் செய்தன! சத்தியமூர்த்தியார் நாள்தோறும் கர்ஜித்தார்! "பாட்டுக்குப் பயப்படும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் எத்தனை நாளைக்கு நீடிக்கும்?" என்று ஒவ்வொரு பிரசங்கியும் மேடையிலே கர்ஜித்தனர். அதைத்திருப்பி, இன்று நான் அவர்களைக் கேட்கிறேன்—கேட்கும் சந்தர்ப்பம் ஏற்படுமென நான் அந்தக் காலத்தில் எண்ணியதில்லை—ஆனால், இந்த சர்க்கார் என்னை அப்படி ஆக்கியிருக்கிறது!

'காங்கிரஸ் அரசாங்கமே! சாதாரண 'ஆரிய மாயை' நூலுக்கே நீ பயந்தால், உன் ஆட்சி எத்தனை நாளைக்கு நீடிக்க முடியும்? நாடகத்தின்மீது சர்வாதிகாரப் பாணங்களைப் பிரயோகிக்கிறாய்? நடிகவேள் ராதா, பணபலமில்லாது, குறைந்த வசதிகளை வைத்துக்கொண்டு நாடகமாடி வருபவர். அவருக்குத் தடை! அவர் செய்யும் அறிவுப் பணிக்குத் தடை! ஏனிந்தப் போக்கு? ராதா 'போர்வாள்' நடத்தினால், நீ ஆடுவதுதானே 'வாட்போர்' என்று மற்றொரு நாடகம்?

நாங்கள் மக்கள் மனதைக் கெடுத்துவிடுகிறோமென்றால், அக்கெட்ட எண்ணத்தை நிரூபித்துக் காட்டுவதுதானே மக்களுக்கு?

நாங்கள் சொல்வது உண்மையாகயிருக்கிற காரணத்தால் உன்னால் மறுக்க முடியவில்லை, மறைக்கவும் முடியவில்லை. எங்கள் மீது பாய்கிறாய்?

இப்போது ஆங்காங்கு பல விடங்களில் 144 தடையுத்திரவுகள் நமது கழக நடவடிக்கைகளுக்குப் போடப்பட்டு வருவதாகத் தகவல்கள் வந்துள்ளன. தஞ்சாவூரில் திருவாரூரில் 'திக்கே திரும்பாதீர்' என்று கூறப்பட்டதாம், அதிராம் பட்டினத்தில் 'அடக்குவோம்' என்று பேசினாராம், குன்னத்தூரில் மிரட்டினாராம்—அதிகாரிகள்.

அதிகாரிகள்மீது நமக்குக்கோபமில்லை! அவர்கள் ஆட்டுகிறபடி ஆடுகிறவர்கள்தானே! ஆனால், 144-போடப்படுவதற்குக் காரணம், ஆங்காங்குள்ள காங்கிரஸ் எம். எல். ஏக்களும், பிரமுகர்களும்தான் என்று தெரியவருகிறது.

இவ்வளவு கேவலமான நிலைக்கு காங்கிரஸ் வந்துவிட்டதைக் காணப் பரிதாபப்படுகிறேன்.

எவ்வளவு கொடுமைகளைச் செய்தாலுஞ் சரி இந்த ஆட்சியாளர், அதைத் தாங்கிக் கொள்வது என்ற முடிவுக்கே வந்துள்ளோம். அதற்காகப் பயந்து எங்கள் பணியைவிட்டு ஓடிவிடும் பரம்பரையைச் சேர்ந்தவர்களல்ல நாங்கள். எனவே, சர்க்காரின் அடக்குமுறைகளை எதிர்த்து அறப்போர் நடத்த, நமது கழகத்தவரை அனுமதித்துவிட்டேன்.

144, எங்காவது இனி நமது முன்னேற்றக் கழக நடவடிக்கைகளுக்கு போடப்படுமானால், மீறத்தான் போகிறார்கள். பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாகிவிட்டது பூனை—புலியாக மாற வேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது.

அறைக்குள்ளே இருக்கிறது பூனை — கதவுகள் தாளிடப்பட்டுவிட்டன. வெளியேறுவதற்குச் சிறிது துவாரமும் இல்லை. திகைக்கிறது, எப்படி வெளியேறுவது என்று யோசிக்கிறது. இந்த நேரத்தில் மென்மேலும் பூனை மீது தாக்கினால் என்ன நேரும். பூனை, கோபத்தோடு எதிரே நிற்பவன் மீது பாய்ந்து கண்ணையோ காதையோ பிராண்டி, தனது ஆத்திரத்தைக் காட்டத்தான் செய்யும். கட்டுப்பட்டும், கஷ்டப்படுத்தப்படும் பூனைக்கு கொலை பாதக எண்ணம் எழும்பத்தான் செய்யும். அந்தச் சூழ்நிலையை இந்த ஆளவந்தார் ஏற்படுத்தத் துடிக்கிறார்கள். பூனை எப்போதும் பூனையாகவே யிருக்காது—தொல்லைமேல் தொல்லை தரப்பட்டுக்கொண்டே யிருந்தால்!

நாங்கள் சட்டவரம்புக்கு உட்பட்டு நடக்க வேண்டும் என்று விரும்புபவர்கள். சட்டத்தின் மேன்மை எங்களுக்குத் தெரியும். அமைதியின் அவசியத்தை நாங்கள் ஆளவந்தாரைவிட நன்றாக அறிவோம். அமைதியும் ஒழுங்குமே உருவான எம்மை, ஆளவந்தாரே! வெளியே தாத்தாதீர்! ஆத்திரமுண்டாகும்படித் தூண்டாதீர்!

நாங்கள் பதவி பட்டம் விரும்புபவர்களல்ல. மற்ற அரசியல் கட்சிகள் செல்லும் பாதை அல்ல எம்முடையது. இதை, நன்றாக, இன்றைய காங்கிரஸ் ஆட்சியாளர் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தி நல்லெண்ணத் தூதுக் கோஷ்டி பொன்று வந்திருக்கிறதாம்! கருவாட்டு வியாபாரியொருவன் வீதியில் கூடைதூக்கி கூவி வரும் போது 'என் கருவாட்டில் மல்லிப்பூ வாடை,' இருக்கிறது என்று கூறினால் எப்படியிருக்கும்? அதைப்போலத்தான் இருக்கிறது இந்த நல்லெண்ணக் கோஷ்டியின் விவகாரம்.

வந்த இந்த தூதுகோஷ்டி முதலில் எங்களைச் சந்தித்திருக்கவேண்டும். இந்தி எதிர்ப்பாளர்களின் நல்லெண்ணத்தைப் பெற வரும் தூது கோஷ்டி, முதலில் யாரைச் சந்திப்பது? எங்களைத் தானே வந்ததும் சந்தித்துப் பேசவேண்டும்!

முதலில் இந்தத் தூதுகோஷ்டி வந்தால் சந்தித்துப் பேசலாம் என்றே இருந்தேன். இப்போது பகிரங்கமாக அறிவிக்கிறேன், இத் தூது கோஷ்டி, அழைப்பு அனுப்பினால் நான் போகத் தயாரில்லை!

[11—10—50 காலை எதிர்பாராத தூதுக் குழுவினர் காஞ்சி அலுவலகத்துக்கே—நேரில் வந்துவிட்டனர். அதன் விளைவாக, வந்தவர்களை மறக்க முடியாது சி. என். ஏ. சந்தித்தார் அவர்களிடமுட இக்குற்றச் சாட்டை வெளியிட்டார். விபரம் இதழில் வேறிடத்தில் காண்க — ஆ-ர்]

வந்தவுடன், இக்கோஷ்டி முதலில் சந்திக்க வேண்டியது எங்களையா? அல்லது மாதவமேனனையும் மற்றோரையுமா? வேலிக்கு ஓணான் சாட்சி? மாதவமேனனும், மந்திரிமார்களும் இந்தியைப் புகுத்தவேண்டும் என்பவர்கள் நாமோ, இந்தி கூடாது என்று எதிர்ப்பவர்கள். நாம் ஏன் எதிர்க்கிறோம் என்பதை அறிய வந்திருப்பதே இத் தூதுகோஷ்டி. அப்படிப்பட்ட கோஷ்டி, நம்மைத் தூற்றுபவர்களிடம் சென்று முதன் முதலில் நம்மைப்பற்றிக் கேட்பது?

பிரதமர் குமாரசாமி ராஜா கூறினாராம் இக் கோஷ்டியிடம், 'இந்தி எதிர்ப்பாளர்கள் அரசியல் காரணங்களுக்காகவே எதிர்க்கிறார்கள்' என் அப்படியேதான் இருக்கட்டுமே! அரசியல் க ணத்துக்காம். அப்படி அரசியல் என்ன மாப கமா? நாங்கள் தொட்டுப் பார்க்கக்கூடாத இந்தி நல்லெண்ணத் தூதுகோஷ்டி, இந்தியை புகுத்துவதற்கு அனுசரணையான வழிவகைகளை காண வந்திருக்கிறதேயொழிய வேறென்ன?

அரசியல் நோக்கோடு எதிர்க்கிறோமாம்! இந்தியை ஏன் புகுத்த வேண்டுமென விரும் கின்றனர், வடநாட்டினர்? அரசியல் நோக்கோ தான். அப்படியிருக்கும்போது நாங்களும் அ அரசியல் நோக்கோடு எதிர்த்தால் என்ன தவ

மாதவமேனன் இத் தூதுகோஷ்டியிடம் மைப்பற்றி விவரித்திருக்கிறார்? இந்தி எதிர்ப் ளர்கள், முதலில் ஜஸ்டிஸ் கட்சியாகயிருந்த அதில் தோல்விகண்ட பிற்பாடு சுயமரியாதை கட்சியாகயிருந்தனர். அதுவும் தோற்றபிற்பா இந்தி எதிர்ப்பாளர்கள், என்று வந்திருக்கின் னர் என்பதாக.

புலி புதரில் பதுங்கிக் கிடந்தது. பொறுக் முடியாது வீதிக்கு வந்தது. பின்னரும் சகிக் முடியாததால் வீட்டினுள்ளே புகுந்தது: என்று என்ன அர்த்தம்? தோற்றுவிட்டது என் பெயர் இதற்கு?

நாம் ஜஸ்டிஸ் கட்சியாகயிருந்தோம்— போதவில்லை!

சுயமரியாதை இயக்கமாகி, சூழ்ச்சிச் செயல்களைச் சாடினோம். சமுதாயத்தி மேடுபள்ளங்களை எடுத்துக்காட்ட, கைலைத்தது. அந்த அரும் பணியில் நாம் ஈடுப டிருக்கிறபோது, இந்தி வந்தது. எதிர்க்கவேண்டி வர்களானோம்! எதிர்க்கிறோம்!!

இதற்குப் பெயர் என்ன—வளர்ந்து வந் ருக்கிறோம் என்பதா? அல்லது சுருங்கிப்போ விட்டோம் என்பதா?

நாம் ஜஸ்டிஸ் கட்சியாகயிருந்தபோது எடுத்த முயற்சிகள் என்ன, கசித்தாபோய்விட் டது. வகுப்புவாரி முறை,—கம்யூனல் ஜி. ஓ— ஜஸ்டிஸ் கட்சி கொணர்ந்ததுதானே? அந்த ச நீதி உரிமை எண்ணம் இன்று உன் கூடாரத் லேயே புகுந்துவிட்டதே? இன்று நீயே, அது ப றிப் பேசும்படியாயிற்றே! இதற்கு என் பொருள்?

விஷயம் புரியாது, எப்பொழுது பார்த்த லும் நம்மைப்பற்றி, ஏதாவது உளறிக்கொண் ருக்கும் மாதவமேனன் இன்னும் ஒன்று கூறி ருக்கிறார் இக்கோஷ்டியிடம். 'இந்தி எதிர்ப்பாள கள் தங்கள் சொந்தப் பெயர்களைக் கூட மாற்றி கொள்ளுகிறார்கள். அந்த அளவுக்கு மொழிவெறி இருக்கிறது' என்பதாக.

நாராயணசாமியாகயிருந்தவர் நெடுஞ்செழிய னாக ஆனதும், சோமசுந்தரம் மதியழகனாக ஆன தும், இந்த மாபெரும் 'அறிஞருக்கு'ப் பிடிக் வில்லை! அவரையே நான் கேட்கிறேன்.

தமிழிலேயே பெயர்கள் இருக்கவேண்டு என்ற அளவுக்கு எங்களிடம் ஆசையிருப்பது உண்மைதான்.

(8-ம் பக்கம் பார்க்க)

"ஆரிய மாயை" வழக்கில் சிறை சென்று மீண்ட திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர், திருச்சியிலிருந்து திருச்சி வரவேற்பு சிவகங்கை மாநாடு, மதுரை கழக உதவி 'சந்திரமோகன்' நாடகம், காஞ்சிபுரம் பாராட்டுக் கூட்டம் ஆகியவைகளில் கலந்து கொண்டு 6—10—50 அன்று மாலை சென்னைக்கு வந்தார். அதுபோது, பிரம்மாண்டமான மக்கள் ஆரவாரத்தோடும், மலர்மாலைகளோடும் அவரை எழும்பூர் இரயில்வே நிலையத்தில் மகிழ்ச்சியோடு வரவேற்றனர். இரயில் வந்து நின்றதும் பிளாட்பாரத்தில் குழுமிக் கிடந்தோர் பரபரப்போடு ஓடுகின்றனர். அக்காட்சியின் ஒருபகுதி இது!

திராவிடநாடு

ஞாயிறு] 15—10—50 [காஞ்சி

காரியமாற்றக் கிளம்புவீர்!

—✕—

ஏழை பங்காளனைப் பேசி, பதவி பெற்றதும் படாடோபத்தால் துள்ளுபவனைத் 'துரோகி' என்றே எவரும் அழைப்பர்! இந்தப் 'பட்டத்துக்கு' அருகதையாகி வருகின்றனர் காங்கிரஸ் ஆட்சியாளரும், அவர் தம் சகாக்களும், கூறிய உறுதி மொழிகளைக் காற்றில் பறக்கவிட்டது மட்டுமல்ல — 'கூர்வாளை' மக்கள் மன்றத்தின் மீது வீசத் தலைப்பட்டுவிட்டனர், பிரிட்டிஷ் ஆட்சியை விடக்கேவலமான அளவில்!

நாட்டின் பல பாகங்களில், நமது கழகக் கூட்டங்களுக்குத் தடையுத்திரவு போடுவதில் ஆங்காங்குள்ள காங்கிரஸ் எம். எல். ஏக்களும், பிரமுகர்களும் கவனமாயிருக்கிறார்களாம்! அதிகாரிகளை மிரட்டி, 'மந்திரியிடம் சொல்வேன்' என்று பயமுறுத்தி, நமது கழகத்து நடவடிக்கைகள் மீது அடக்குமுறை 'ஈட்டியை' வீசச் செய்கிறார்களாம்!!

அதிகாரிகள் எப்போதும் இருப்பார்கள்— ஆளவந்தார்கள் அப்படியல்ல. ஆயினும், ஆளவந்த கட்சியினரின் கெடுபிடிக்குத் தலை சாய்க்கவேண்டியவர்களாகி விட்டார்கள் அதிகாரிகள். இந்தத் துயரக் காட்சியை இங்கன்றி வேறு எங்கும் காண முடியாது! நாடு 'இவர்கள்' ஆட்சியில் கேவலமானதோடு, ஆட்சி இயந்திரமும் சுக்கு நூறாக்கப்பட்டு வருகிறது! அதிகாரம் நம்மிடம் என்ற ஆர்ப்பரிப்பால் காங்கிரஸ் பிரமுகர்கள், அதிகாரிகளை ஆட்டுவித்து, ஆங்காங்கு 144 போன்ற தடைகளை வீசுகின்றனர்!

> பேச்சுரிமை, எண்ண உரிமை எல்லோருக்கும் உண்டு, சமாதான முறையில் ஆயுதமில்லாது எல்லோரும் கூடலாம்

இது, புதிதாகச் சட்டமான இந்திய அரசியலமைப்பின் 19-வது விதியாகும். இந்திய மக்களின் சுதந்திர உரிமைகள் பற்றி, இவ்விதி விரித்துச் சொல்கிறது.

ஆனால், பேச்சுரிமை - கூட்டம் போடும் உரிமை மறுக்கப்படுகிறது—மேற்படி சட்டத்தை வகுத்த காங்கிரஸ் ஆட்சியினரால். வேதனை தரக்கூடிய காட்சி! வெட்கப்படவேண்டிய சம்பவம்— எனினும் நாள் தோறும் விரிந்துகொண்டேயிருக்கிறது!

பலாத்காரமின்றி, அமைதியாக, பல்லாண்டு காலமாக பணியாற்றிவரும் நம்மை நோக்கிப் பாய்கின்றனர். தடையுத்தரவுகளை வீசுகின்றனர். அதற்குக்காரணமாக, நம்மைப்பற்றி 'துவேஷ பிரச்சாரம்' செய்கின்றனர். நம்மால் அமைதிக்குப் பங்கம் விளையுமாம்! சமாதானத்துக்கு இடையூறு ஏற்படுமாம்! துணிந்து சொல்கிறார்கள்—ஓராண்டில் 2000-க்கு மேற்பட்ட கூட்டங்கள் நடத்தியிருக்கும் நம்மைப்பற்றி!

நமது எழுத்துரிமை—பேச்சுரிமை ஆகியவைகளை இழந்துவிட்டு உலவ, நாம் ஏமாளிகளல்ல! இடுப்பு ஒடிந்த கோழைகளுமல்ல! இந்த அடிப்படை உரிமைகள்—நமது ஜீவநாடி. ஆகவேதான் இவைகளைக் காம்பதென, முடிவு செய்துவிட்டோம்.

நாடகங்கள் நடத்துவது, எழுத்துரிமை காப்பது சம்பந்தமாக தலைமை நிலையத்துக்குத் தகவல் கோரி, விளக்கம் பெற்று காரியமாற்றக் கிளம்புங்கள்—என்று அழைக்கிறோம். வீரகீதம் எழும்பட்டும்—விண்ணர் நம்மை உணரட்டும்!

—

26—10—50

மாலை

ஸ்ரீபெரும்புதூர் தாலுக்காவைச் சேர்ந்த

குன்றத்தூர்

பொதுக் கூட்டம்

'திராவிடன்' ஆசிரியர்

என். வி. நடராசன்

பேசுவார்

மூன்றுவது முறை "சவுக்கடி" வழக்கு

தங்கப்பழம் சிவசாமிமீது அடக்குமுறை

சர்க்காரின் கேலிக்கூத்து!

தோழர்கள் சிவசாமி, தங்கப்பழம் ஆகியோர் எழுதி வெளியிட்ட "சவுக்கடி" என்ற புத்தகம் மீது ஏற்கெனவே ஒருமுறை வழக்கு தொடரப்பட்டு பின்னால் அது தள்ளுபடி செய்யப்பட்ட விபரமும், தள்ளுபடி செய்த மறுநாளே மீண்டும் சம்மன் சார்வு செய்து வழக்கை திரும்பவும் விசாரணைக்கு எடுத்ததும், அதை ஆட்சேபித்து சென்னை உயர் நீதி மன்றத்தில் அவர்கள் அப்பீல்செய்து வழக்கை திரும்பவும் எடுக்கக்கூடாது என்று Stay Order வாங்கியதும் நாம் அறிந்தவையே!

உயர் நீதி மன்ற விசாரணையிலும் வழக்கை தள்ளுபடி செய்துவிட்டார்கள். மீண்டும் இந்த சர்க்காரால் சும்மா இருக்கமுடியவில்லை. மூன்றுவது முறையாக வழக்கை தொடர்ந்துவிட்டார்கள்—ஆச்சர்யம்! 153 ஏ, 292, 295, ஆகிய மூன்று செக்ஷன்களை பிரயோகித்து சம்மன் சார்பு செய்துவிட்டார்கள்—விசித்திரம்! 16—10—50ல் தூத்துக்குடி அடிஷனல் மாஜிஸ்டிரேட் முன்பு வழக்கு விசாரணைக்கு வருகிறது.

—

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சி. என். ஏ. :- நன்மைகள் எதுவும் இல்லை. தாங்கள் சொல்வதெல்லாம் நாங்கள் கேட்டு சலித்துப்போனவை.

பாண்டே:— ஆந்திரம், கேரளம், கர்னாடகம், தமிழகம் ஆகியவைகள் திராவிடஸ்தானில் அடங்கியிருக்க வேண்டும் என்று கூறுகிறீர்கள். அது எப்படி?

சி. என். ஏ. :- அந்தப் பிரதேசங்களில் வாழ்வோரெல்லாம் இனவாரியாகப் பார்த்தால் (Ethnically) திராவிடர்கள்.

ஆப்டே:- அப்படியென்றால் மகாராஷ்டிரம்? அங்கும் திராவிடர்கள் இருக்கிறார்கள் - பஞ்ச - திராவிடர் என்று கூறப்படுகிறார்கள்.

சி. என். ஏ. :- ஆமாம்! அவர்களே, விரும்பினால் தனிநாடு அமைத்துக்கொள்ள வேண்டியது தான்.

காஞ்சனலதா:- வங்காளம்?

சி. என், ஏ:- அவர்கள் விரும்பினால்!

காஞ்சனலதா:- இப்படியே பிரிந்து கொண்டே போனால்......?

சி. என். ஏ:-ஏன்? விதர்ப்பம்போன்று 42 ராஜ்யங்களிருந்திருக்கின்றனவே!

ராகவதாஸ்:- அது சரி. மொழிவாரி மாகாணங்கள் பிரிக்கப்பட வேண்டுமெனக் கூறப்படுகிறதே!

சி. என். ஏ:- அது, நிர்வாகம் சுலபமாகயிருப்பதற்குத்தான். நாங்கள் கூறும் வகையில் அல்ல!

ராகவதாஸ்:- தங்கள் திராவிடஸ்தானில் ஆந்திரம், கேரளம், கர்னாடகம் ஆகியவைகளின் பொதுமொழி என்ன?

சி. என். ஏ:- ஆந்திரத்தில் தெலுங்கு, கர்னாடகத்தில் கன்னடம், கேரளத்தில் மலையாளம் முறையே அவர்கள் சொந்த மொழியாக இருக்கும். கூட்டு ஆட்சி மொழியாகவும் சர்வதேச மொழியாகவும் (Federal and International) ஆங்கிலம் இருக்கலாம்.

இராகவதாஸ்:- ஆங்கிலம் படித்தவர்கள் எத்தனை பேர்?

சி. என். ஏ:- 10% அல்லது 12% இருக்கலாம்.

காஞ்சனலதா:- அதாவது, வட்டார மொழிகள் அறிந்தவர்களைவிட மிகக் குறைவு.

இராகவதாஸ்:- உதாரணமாக, நான் ஒரு சாதாரண பிரஜை. எனக்கு ஆங்கிலம் தெரியாது. அப்படியானால் உங்கள் பார்லிமெண்டில் எனக்கு இடம் கிடையாது.

சி. என். ஏ:- மன்னிக்கவேண்டும். வட்டார மொழிகளறிந்தவர்கள் சட்டசபை போகத் தடையில்லை. அந்தந்தப் பகுதியில் அந்த வட்டார மொழிதான் அரசியல் மொழியாக இருக்கும்.

இராகவதாஸ்:- அப்படியானால் ஆங்கிலம்...?

சி. என். ஏ:- அகில உலக தொடர்புக்கும், கூட்டாட்சி வியவகாரங்களுக்கும் அது பயன்படும் என்று குறிப்பிட்டேனே!

இராகவதாஸ்:- பொதுஜனமாகிய எனக்கு உலகம் வேண்டியதில்லை! நீங்கள் என்னைப் போன்றவருக்கும் சர்க்காருக்கும் இடையிலிருந்து மொழி பெயர்ப்பு வேலை செய்பவர்களாக ஆவீர்கள்!

சி. என். ஏ:- ஒரு ஜனநாயக ஆட்சியில் பொதுஜனம் கட்டிப்பொருளல்ல—ஜனநாயகத்தின் உயிர் நோக்கமே அவர்களை முன்னேற்றுவதுதானே. ஆகவே, அறியாமை அதிக நாட்கள் நீடிக்கவேண்டுமா? பொதுஜனம், எப்பொழுதுமே பொதுஜனமாகவே இருக்கவேண்டும் என்பது தங்கள் விருப்பமா?

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக நிதிக்காக

அரிய விருந்து! சீரிய பணிக்காக!!

19-10-50 வியாழன், 20-10-50 வெள்ளி ஆகிய நாட்களில்

சென்னை ஒற்றைவாடை தியேட்டரில்

நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமியும், குழுவினரும்

நடிக்கும்

★ **ஓர் இரவு** (அண்ணாதுரை தீட்டியது) **நாடகம்**

பல்லாயிரக்கணக்கில் மக்கள் பார்த்து மகிழ்ந்த நாடகம்!

சென்னை மக்களுக்கு முதல் வாய்ப்பு!

டிக்கெட்: ரூ. 5, 3, 2, 1.

டிக்கெட் கிடைக்குமிடங்கள்:—

202, தங்கசாலைத்தெரு, நாடக நாட்களில் காலை முதல் கொட்டகையில்.

1-ம் பக்கத் தொடர்ச்சி

இந்த விஷயத்தில், அடிப்படையிலேயே நமக்குள் கருத்து வேற்றுமை இருக்கிறது.

சதுர்வேதி:- அதுபற்றி எங்கள் தெளிவுக்காக, விளக்க முடியுமா? தாங்கள், திராவிடஸ்தான் கோருவதாகக் கேள்வியுற்றோம். அது சாத்தியமாகுமா? இந்தியாவைக் கூறுபோட்டு இரண்டாக்கி பாக்கிஸ்தான் என்று ஒரு தனிநாட்டைச் சிருஷ்டித்ததால் எவ்வளவு கஷ்டங்களுக்கு ஆளாகியிருக்கிறோம்! எவ்வளவு இரத்தம் சிந்தப்பட்டிருக்கிறது! அகதிகள் பிரச்னை எவ்வளவு தொல்லையாக இருக்கிறது. பிரிவினையால், பொருளாதாரத் துறையில் நமது நாடு எவ்வளவு சங்கடப்படுகிறது. இதையெல்லாம் கவனிக்கும்போது, தனி நாடாகப் போவதிலுள்ள கஷ்டங்கள் விளங்கவில்லையா? இந்தியாவை, ஆர்யாவர்த்தம் என்றும், சீக்கிஸ்தான் என்றும் திராவிடஸ்தான் என்றும் பிரிப்பதால், இப்போது நாம் பாகிஸ்தானைப் பிரித்ததால் ஆளான கஷ்ட நஷ்டங்கள் உண்டாகாதா?

சி. என். ஏ:- உண்மைதான். ஆனால் எங்கள் கோரிக்கை வேறுவிதமானது; பாகிஸ்தான், சீக்கிஸ்தான் போன்றதல்ல! ஏனெனில்,

பாகிஸ்தான்—ஒரு புது சிருஷ்டி! சீக்கிஸ்தான்—ஒரு புதுக் கோரிக்கை! திராவிடஸ்தான்—தனியாகயிருந்த நாடு, தனியாக இருக்கும் நாடு!

பாண்டே:- அப்படியென்றால்?

சி. என். ஏ:- நாங்கள் கோரும் திராவிடநாடு பூகோள ரீதியிலும், சரித்திர ரீதியிலும் எப்போதும் தனியாகவேயிருந்ததாகும். வட இந்தியாவைப் போன்றதல்ல. பெரிய பெரிய சாம்ராஜ்யங்கள் வடக்கேயிருந்திருக்கின்றன. சந்திரகுப்தன், அக்பர், அவுரங்கசீப் போன்றோருடைய சாம்ராஜ்யங்கள் வடக்கிலிருந்திருக்கின்றன! அப்போதும், நாங்கள் கூறும் திராவிடநாடு — தென்னாடு தனியாக, தனி அரசுடனேயே, இருந்ததாகும்.

பிரிட்டிஷார் இந்தியாவுக்கு வந்து, இந்திய நாட்டைத் தங்கள் வசப்படுத்திய பின்னரே இந்தியா உருவாயிற்று நிர்வாக வசதிக்காக தென்னாடும் இணைக்கப்பட்டு டெல்லி ஆட்சி ஏற்பட்டது.

அதற்கு முன்னதாக தென்னாடு — தக்காணம்—ஒரு தனிச்சுதந்தர நாடாகத்தான் இருந்தது!

சதுர்வேதி:- தாங்கள் தனிநாடு கோருவதன் நோக்கம் என்ன?

சி. என். ஏ:- எல்லா அதிகாரங்களும் எம்மிடமே இருக்கவேண்டும் என்பதுதான் இப்போது எதெற்கெடுத்தாலும் டெல்லிக்குப் போக வேண்டியிருக்கிறது. அங்கிலையில்லாமல், எங்களது வர்த்தகத்தை நாங்களே நடத்த உரிமையிருக்கவேண்டும். இது போன்ற எங்களது விவகாரங்களில் இன்னொருத்தர் தலையீடு இருக்கக் கூடாது. எல்லாம் எங்களாலேயே கவனித்துக்கொள்ளப்பட வேண்டும்.

பாண்டே:- பொருளாதார ரீதியில் அது சாத்தியமா?

சி. என். ஏ:- சாத்தியம்தான். எங்களை நாங்கள் ஆண்டுகொள்வதற்கான அத்துணை வசதிகளும் உள்ளன.

சதுர்வேதி:- அதாவது, திராவிடஸ்தான் பொருளாதார வசதி நிறைந்த தனி 'யூனிட்' என்று தெரிந்துகொண்டேன். அப்படித்தானே?

சி. என். ஏ:- ஆமாம்!

சதுர்வேதி:- அப்படியிருந்தாலும், இதுபற்றிய எனது சொந்த அபிப்பிராயத்தைக் கூற விரும்புகிறேன். இரயில்வே, தபால் போக்குவரத்து போன்ற சில முக்கிய சாதனங்கள் பொதுவாகயிருப்பதுதானே நல்லது. நான் பிரயாகையில் புறப்பட்டு, கன்யாகுமரிக்கு வருகிறேன். பொதுவாக, ஓரே நிர்வாகத்திலிருந்தால், நான் நேராக வரமுடியும். அப்படியில்லையென்றால், ஒவ்வொரு பிரதேசத்தில் நுழையும் போதும், இறங்கி 'பாஸ்போர்ட்' போன்றவைகளைக் காண்பித்துவிட்டு, செல்ல வேண்டும். இதுபோன்ற கஷ்டங்கள் தபால் போக்குவரத்திலும் ஏற்படும். இது, ஓரே நிர்வாகத்திலிருந்தால் ஏற்படாதல்லவா?

சி. என். ஏ:- உண்மைதான்! ஆனால், ஜெர்மனியிலிருந்து பிரான்ஸ், பிரான்சிலிருந்து இத்தாலி என்று செல்லும்போது, இறங்கி 'பாஸ்போர்ட்' காட்டவேண்டியிருக்கிறதேயென்கிற கஷ்டத்திற்காக, ஐரோப்பிய மக்கள் எல்லாவற்றையும் ஓரே நிர்வாகத்தில் கொண்டுவரவேண்டும் என்று விரும்புகிறார்கள்? பல நன்மைகளை நினைத்து தனிநாடு வேண்டுமெனக் கேட்டால் சில்லரைச் சங்கடங்களையேற்கத்தானே வேண்டும்!

காஞ்சனலதா:— ஓரே உலகம் ஏற்படவேண்டும், உலகிற்கே ஒரு பொதுப் பார்லிமெண்டு ஏற்படவேண்டும் என்றெல்லாம் பேசப்படுகிற இந்தக் காலத்தில் 'தனியாகப் போகிறேன்' என்று கூறலாமா? ஒற்றுமையைக் குலைக்கலாமா? ஒரு குடும்பத்தில் வசிக்கும் இரு சகோதரர்களல்லவா நாம்?

சி. என். ஏ. :- தங்கள் உவமானம் தவறு எனக் கூற வருந்துகிறேன். நாம் ஓரே குடும்பத்தில் வசிக்கும் சகோதரர்களல்ல! ஓரே வீட்டில் குடியிருக்கும் இரு நண்பர்கள்! அதிலும் அழகான தனி வீடு இருக்கும்போது கட்டாயப்படுத்தி ஓரே வீட்டில் வைக்கப் பட்டிருக்கும் நண்பர்கள்!

உலகஐக்கியம் பற்றிக் கூறினீர்கள். நாங்கள் தனி நாடாகப் பிரிவதால், உலகத்தோடு தண்டித்துக் கொள்ள மாட்டோம். உலக விவகாரங்களில் அக்கரை காட்டுவோம். வெளிநாட்டு விஷயங்களில், இந்தியா முழுமையுள்ள பிறருடைய கருத்து எப்படிச் செல்கிறதோ, அதோடு ஒன்றியே நாங்களும் இருப்போம்.

சதுர்வேதி:- அதாவது, வெளிநாட்டு விவகாரங்களில், பொதுவாகயிருந்து, இந்திய ஆட்சியினர் எடுக்கும் நடவடிக்கைகளோடு ஒத்துழைப்பீர்கள்.

காஞ்சனலதா:- அது எப்படி இயலும்?

சி. என். ஏ. :— முடியும்! இப்போது உலக விவகாரங்களைக் கவனித்துக்கொள்ள ஐக்கிய நாடுகள் சபையில்லையா. அதைப்போல இந்திய உபகண்ட முழுமைக்கும், நாம் ஒரு சபையை ஏற்படுத்திக்கொண்டு, வெளிநாட்டு விவகாரங்கள் பற்றிய பொதுக் கொள்கையை நிர்ணயித்துக் கொள்ளலாம்.

காஞ்சனலதா:- வெளிநாட்டு விவகாரம் தவிர்த்து ஏனைய பொறுப்புகளும், அதிகாரங்களும் உங்கள் வசமே இருக்கவேண்டுமென விரும்புகிறீர்கள். இதை, மத்திய சர்க்காரிடம் தெரிவித்து உங்கள் அதிகாரங்களைப் பெருக்கிக் கொள்ளலாம்! உங்கள் மாகாணத்துக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமெனக் கோரி, அவைகள் இந்திய சர்க்காரால் மறுக்கப்பட்டால், பின்னர் ஏன் 'பிரிவினை' குறித்துப் பேசக்கூடாது? இப்போது இந்திய சர்க்காருடன் இணைந்திருப்பதால் எவ்வளவு நன்மைகள் இருக்கின்றன?

(4-ம் பக்கம் பார்க்க)

சி. என். ஏ. சுற்றுப் பயணம்

21-10-50 ஆர்க்காடு

22-10-50 கோவை

திராவிட மாணவர் மாகாண மாநாடு

சென்னையில் நடைபெறும்

வரவேற்புக்குழுக் கூட்டம்

அக்-11-ந் தேதி மாலை 6-மணியளவில் சென்னை தங்கசாலைத் தெரு கழகக்கட்டிடத்தில், சென்னை மாநில திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநாட்டிற்கு வரவேற்புக்குழு அமைக்கும் கூட்டம் நடைபெற்றது. சென்னையிலுள்ள பல்வேறு கல்லூரிகள், உயர்நிலைப்பள்ளிகளின் பிரதிநிதிகள் 100-க்கு மேற்பட்டவர் கலந்து கொண்டனர். வெளியூர் கல்லூரிகள், உயர்நிலைப்பள்ளி மாணவப் பிரதிநிதிகளிடமிருந்து ஏராளமான கடிதங்கள் வந்திருந்தன. கூட்ட ஆரம்பத்தில் தோழர் கே. ஏ. மதியழகன் மாநாட்டின் அவசியம் குறித்தும், மாணவர்கள் முன்னுள்ள பல பிரச்சனை குறித்தும், அதற்காக செய்யவேண்டிய பொறுப்பான பணிகள் குறித்தும் எடுத்துக்கூறி, சட்டக்கல்லூரி மாணவர் தோழர் கோகுலகிருஷ்ணன் பி. ஏ., வை கூட்டத்திற்கு தலைமைவகித்து நடத்தித் தருமாறு வேண்டிக்கொண்டார். இதை ஆர்ட்ஸ் கல்லூரிமாணவர் தோழர் சுப்பையாவும், ஸ்டான்லி மெடிகல்கல்லூரி மாணவர் தோழர் கபீரும் ஆமோதித்தனர். பிறகு தலைவரும் மாணவப் பிரதிநிதிகளும் தங்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்தனர். மாநாட்டின் தலைவராக மதுரை தோழர் சத்தியேந்திரன் பி. ஏ. பி. எல்., அவர்களையும், திறப்பாளராக சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்களையும், வரவேற்புக் கழகத் தலைவராக தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களையும் வரவேற்புக் குழு தேர்ந்தெடுத்தது. மாநாட்டின் செயலாளர்களாக தோழர்கள் பி. சுப்பையா, (ஆர்ட்ஸ் கல்லூரி) கே. ராமமூர்த்தி (பச்சையப்பன் கல்லூரி) வி. கண்ணன் (தொண்டை மண்டல உயர்நிலைப் பள்ளி) மயிலை ப. சீனுவாசன் (சாந்தோம் உயர்நிலைப் பள்ளி, மயிலாப்பூர்) ஆகியோரும் பொருளாளராக தோழர் டி. விசுவநாதம் (பச்சையப்பன் கல்லூரி) தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வரவேற்புக் கழக உறுப்பினர்கள் பின்வருமாறு:-

ஸ்டான்லி மெடிகல் கல்லூரி: எஸ். ஏ. கபீர் யு. நடராசன், சட்டக் கல்லூரி: ஏ. பி. வெங்கடாசலம், பி. ஆர். கோகுலகிருஷ்ணன், இஞ்சினீயரிங் கல்லூரி: முத்துவேல், குமாரசாமி, மதராஸ் மெடிகல கல்லூரி: துளசி, ஷாஜாதேகான், பச்சையப்பன் கல்லூரி: குலசேகரன், பி. பாலன், ஆர்ட்ஸ் கல்லூரி: டி. கே. பொன்வேலு. எஸ். டி. மூர்த்தி, விருத்துவக் கலலூரி: பாலகோபால், டி. ராமு, விவேகானந்தா கல்லூரி: கா. நா. திருநாவுக்கரசு, தியாகராயர் கல்லூரி: பாண்டியன், பிரசிடென்சி கல்லூரி: பழனியப்பர், சி. என். டீ. இன்ஸ்டிடியூட்: இ. இளங்கோவன், ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸ்: அன்பானந்தன், தொண்டை மண்டல து. வே. உயர்நிலைப்பள்ளி: கோ. பெருமாள், வெ. சுந்தரம், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி சி. ஏ. சண்முகம், பி. எஸ். சுப்பிரமணியம், தியாகராயர் உயர்நிலைப்பள்ளி (வண்ணாரப் பேட்டை): மா. செ. முனுசாமி, ராமகிருஷ்ணன், சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சி. எஸ். குமார், வி. ஜி. முனுசாமி, இந்து தியாலஜிகல் உயர்நிலைப்பள்ளி: கிருஷ்ணமூர்த்தி, கஜேந்திரன், முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி: சி. தாமோதரன், சு. ப. சிவன், திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப்பள்ளி: மா. பா. குணாளன், செ. வி. தமிழரசன், சாந்தோம் உயர்நிலைப் பள்ளி, மயிலாப்பூர்: ப. முல்லைநாதன், தி. ப. சீனுவாசன், ராயப்பேட்டை வெஸ்லி உயர்நிலைப்பள்ளி தமிழ்த் தம்பி, கிருஷ்ணன், புரசைபாக்கம் இ. எல். எம். உயர்நிலைப் பள்ளி: நாதகிருஷ்ணன், ஆகியோராவர்.

இத்துடன் மற்றைய வெளியூர் கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றிலிருந்தும் 2—பிரதிநிதிகள் சேர்த்துக் கொள்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

மாநாட்டை சென்னையில் 28 அல்லது 29 தேதிகளில் நடத்துவதென்றும், ராஜாஜி மண்டபம், ஒற்றைவாடை தியேட்டர், செயிண்ட்மேரி மண்டபம் ஆகிய ஏதாவதொரு இடத்தில் நடத்த ஏற்பாடு செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. மாநாட்டுக் கட்டணம் வரவேற்புக் குழு உறுப்பினர் ரூ 2, பிரதிநிதிகள் ரூ 1 பார்வையாளர் அணா 8 என்றும் முடிவு செய்யப்பட்டது. மாநாட்டில் கருத்துரைகள் வழங்க பல அறிஞர் பெருமக்களை அழைப்பதெனவும் யோசனை செய்யப்பட்டது.

மீண்டும் 18—10—50 மாலை வரவேற்புக் குழு கூடுவது என்ற முடிவுடன் இரவு 9 மணிக்கு வரவேற்புக் குழு கலைந்தது.

காஞ்சியில்

15—10—50 மாலை 6 மணிக்கு பகுத்தறிவு மன்ற சார்பில் காந்தி மைதானத்தில் தோழர்கள் டி. கே. சீனிவாசன், காஞ்சி கல்யாணசுந்தரம், கே. டி. எஸ். மணி, வி. பி. சிவம் ஆகியோர் பேசுவர். தோழர் சி. எஸ். சஞ்சீவி தலைமை தாங்குவார்.

அடக்குமுறை ஆட்சிக்கு அர்ப்பணம்!

நாட்டு நிலையின் படப் பிடிப்பு

கண்டனக் குமுறல்களைக் காணீர்!

'ஆரிய மாயை' வழக்கு மூலம், திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் சி. என். ஏ தண்டிக்கப்பட்டு சிறைவாசம் சென்றது கண்டு, நாடே கொதித்தது. 'திராவிடரியக்கத் தலைவர்களுக்காகச் சிறை!' என்று நல்லோர் துடித்தனர்.

ஆங்காங்குள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அடக்குமுறையின் கொடுமை குறித்து மக்களுக்கு விளக்கப்பட்டிருக்கிறது. அந்த நிகழ்ச்சிகள், ஏராளமாகக் குவிந்து கிடக்கின்றன. ஆர்வம் ததும்பும் அந்தச் செய்திகளை அப்படியே. எல்லாவற்றையும் வெளியிட முடியாத 'இடமில்லாத' நிலைமைக்கு வருந்துகிறோம். கொஞ்சங் கொஞ்சமாக, தொடர்ந்து வெளியிடுகிறோம். தோழர்கள் பொறுத்தருள்க.

—(ஆ-ர்)

திருச்சி:- 18—9—50ல் திருச்சியில் தீர்ப்பு வழங்கியவுடன், மக்கள் ஊர்வலமாக பல தெருக்களின் வழியே சென்றனர். நகரக் கிளையின் சார்பில் மாலை 7-மணிக்கு டவுன் ஹாலில் கண்டனக் கூட்டம் என். சாப்பு தலைமையில் நடந்தது. இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., ஈ. வே. கி. சமபத், கே. ஆர். இராமசாமி, எம். எஸ். சிவசாமி, டி. கே. சீனுவாசன் பேசினர். செயலாளர் எம். எஸ். மணி நன்றி கூறினர்.

நாகூர்:— 24—9—50 தோழர் ப. தி. ராசன் தலைமையில் தோழர் எஸ். வி. சபாபதி முதலியோர் பேசினர். இசை முரசு ஹனீபா நாட்டுப்பண் இசைத்தார்.

ஆர்காடு—24—9—50 தி. மு. கமிட்டியின் கண்டனம். தோழர் மணிவண்ணன் தலைமை வகித்தார்.

நெடும்பலம்—24—9—50 அன்று தோழர்கள் சேஷாசலம், கல்யாணசுந்தரம், குஞ்சிதபாதம், தங்கவேலு பேசினர்.

செயங்கொண்டான்—27—9—50 தோழர் மெத்துசலா தலைமையில் தோழர்கள் இரத்தினசாமி, மாணவர் இராமச்சந்திரன், குடந்தை S. K, சாமி பேசினர்.

சிம்மக்கல் (மதுரை) தோழர் சண்முகக்கனி தலைமையில் தோழர்கள் அ பிச்சை, இராமானுசம், அ. ரெங்கனுதன் பேசினர்.

வேலூர்—தோழர் அண்ணாமலை தலைமையில் கிருஷ்ணன், பாண்டியன், குப்புசாமி, டி.கே. சாமி, இளஞ்செழியன், எத்திராசு, வேணு பேசினர்.

கணியூர் — தோழர் கே. ஏ. முருகேசம் தலைமையில் தி. மு. க. கமிட்டி கண்டனம்.

திருப்பூர் — தோழர் எஸ். ஆர். சுப்பிரமணியம் தலைமையில் பெத்தாம்பாளையம்பழனிச்சாமி வி. பாலசுப்பிரமணியம், பி, ஏ. க. சுப்பிரமணியம் பேசினர்.

தரங்கம்பாடி (வெளிப்பாளையம்):- 18—9—50ல் எஸ். எம். மொய்தின் தலைமையில் நடந்த திருவள்ளுவர் வாசகசாலை நிர்வாகக் குழுக் கூட்டத்தில் கண்டனம்.

கடம்பூர்:- 18—9—50ல் எம். எஸ். பொன்னுச்சாமி தலைமையில நடந்த தி, மு. க. செயற்குழுக் கூட்டத்தில், மறுநாள் கண்டன ஊர்வலம், பொதுக் கூட்டம் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

தேவகோட்டை— 21—9—50ல் இராம. வெள்ளையன் தலைமையில் கண்டனக்கூட்டம். செந்திருதன், பா. பா. சு. மணி, உ. சி. வாசன், பரமசிவம், வி. ஆர், சாமி, பேசினர்.

இடைப்பாடி:— 24—9—50ல் கண்டன ஊர்வலம் நடந்தது. எம். வரதராஜன், 'நான் சென்று வருகின்றேன்' என்ற அறிக்கையைப் படித்துக் காண்பித்தார்.

குடியேற்றம்:—23—9 50ல் கண்டி அப்பாதுரை தலைமையில் நடந்த திராவிட இயக்கத் தோழர்கள் கூட்டத்தில் கண்டனம். தேவராசன், பார்த்தசாரதி ஆகியோர் முன்மொழிந்தும் வழிமொழிந்தும் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருக்கழுக்குன்றம்:— 21—9—50ல் கண்டன ஊர்வலமும், என். மாணிக்கம் தலைமையில் பொதுக்கூட்டமும் நடந்தன. எம். எஸ். மணி, சருநாதன், அழகரசு, எம். சின்னையா பேசினர்.

பொள்ளாச்சி:— 24—9—50ல் தி. மா. மு. க. சார்பில், அ. க. பாலு தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் கோபால், இளமாறன், நெடுமாறன், சங்கமணி, இளங்கோ பேசினர். கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருப்பத்தூர்:— க. நெடுஞ்சோழன் முயற்சியினால் பொதுச் செயலாளரின் 'நான் சென்று வருகிறேன்' என்ற அறிக்கை ஏராளமாக அச்சிடப்பட்டு நகர் முழுவதும் பரப்பப் பட்டது. அங்கங்கே தோழர்கள் படித்தும் காண்பித்தனர்.

24—9—50ல் தி. மு. க, தி. ச. சார்பில் கண்டன ஊர்வலமும், ஜெயவேலு தலைமையில பொதுக் கூட்டமும் நடந்தன. வேலர் நடேசன், முத்துசாமி, மணி எழிலன், கோபால், நெடுஞ்சோழன் பேசினர். வெங்கடராஜு, இளம்பிறை, மு, இளங்கோ, முறையே 'பொன்மொழிகள்' 'ஆரியமாயை, 'சந்தியார் சாந்தியடைய, என்ற நூல்களில் சில பகுதிகளைப் படித்துக் காண்பித்தனர்

திருவத்திபுரம்:— 24—9—50ல் தி. மு. க. தி. க. சார்பில் சி. வே. சுப்பராயன் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் செங்கமலம், பு. து. சனார்த்தனம், புலவர் மாவண்ணு தேவராசன், புலவர் கோவிந்தன் பி. ஓ. எல். பேசினர்.

சேத்துப்பட்டு (சென்னை):— 24-9-50ல் நடந்த தி. மு. க. பொது அங்கத்தினர் கூட்டத்தில் சங்கரன், நடராசன் முன்மொழிந்தும் வழிமொழிந்தும் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சங்கர நயினர் கோவில்:— 24—9—50ல் க. இராசேந்திரன் தலைமையில் கூடிய தி. மு. க. செயற்குழுக் கூட்டத்தில் கண்டனம்.

நாட்டறம் பள்ளி:- வடார்க்காடு மாவட்ட முன்னாள் தி. க. தலைவரும், பஞ்சாயத்து கோர்ட்டு பிரசிடெண்டுமான ஆர். வெங்கட்டராமன், சர்க்காரின் அடக்கு முறையை எதிர்த்து நீண்ட அறிவிப்பு ஒன்று வெளியிட்டுள்ளார்

இடையபட்டி:- 24—9—50-ல் காசிலிங்கம் தலைமையில் கூடிய தி. மு: க. செயற்குழுக் கூட்டத்தில் கண்டனம்.

உறையூர் (திருச்சி):- 24—9—50-ல் அப்பில். ஏ. பி. தர்மலிங்கம் தலைமையில் நடந்த தி. மு. க. முதலாண்டு விழா கூட்டத்தில், என். எஸ். கே. நாடகக் குழு தோழர் கே ஆர். செல்லமுத்து பாட, எஸ். நெடுமாறன், பராங்குசம், எம். எஸ். மணி சென்னை. கே. கோவிந்தசாமி, புதுக்கோட்டை தமிழ்ச் சேரன், கண்ணதாசன், மு. கருணாநிதி பேசினர். சர்க்காரின் அடக்குமுறைக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

குன்றை:— இவ்வூர் திராவிட இயக்கத்தவர், ஆட்சியாளரின் அக்கிரம போக்கைக் கண்டித்து ஆங்காங்கே ஏராளமான கையொப்பங்கள் திரட்டி சர்க்காருக்கு அனுப்பியுள்ளனர்.

பெட்டைக்குளம்:- 24—9—50-ல் அப்துல் மஜிது தலைமையில் நடந்த பொதுஜன ஊழியர் சங்க செயற்குழுக் கூட்டத்தில் கண்டனம்.

திரிகோணமலை:- 23—9—5ல்-ல் கே. எம். அறிவாளன் தலைமையில் அண்ணு மன்றம் சார்பில் நடந்த 'திராவிடநாடு நாள்' விழாவில் எஸ். ராயப்பு, காதர் மொகைதீன், ஆர். பாலகிருட்டினன், எஸ். கே. தம்பி. அடக்குமுறையை எதிர்த்துப் பேசினர்.

தேனி:— 20—9—50-ல் சோ. பழனிச்சாமி தலைமையில் நடந்த கண்டனப் பொதுக் கூட்டத்தில் துரைச்சாமி, பெரியமுத்து, கருப்பையா பேசினர்.

கோவை:- 18—9—50-ல் இரவு செய்தி கிடைத்தவுடன் தட்டிகள் மூலம் பொதுச்செயலாளர் சிறைப்பட்ட விவரத்தை அறிவித்தனர் 19—9—50-ல் டவுன்ஹால் மைதானத்தில் சின்னதுரை தலைமையில் நடந்த தி. மு. க. பொதுக் கூட்டத்தில் இளங்கோ, செழியன், சி டி. தண்டபாணி, எஸ். ஏ. இராசமாணிக்கம், கோபி ஜி. என். ராசு பேசினர்.

24—9 - 50—ல் தி. மு. க. சார்பில் ஒரு மாபெரும் கண்டன ஊர்வலம் நடந்தது. மாலை காந்தி

(அடுத்த பக்கத்தில்)



★

இளம்வழுதி விசாலாட்சி

★

குறிஞ்சிப்பாடியில் 15—9—50 அன்று காலை 10 மணியளவில் தோழர் இளம்வழுதி—விசாலாட்சி திருமணம் சி. என். அண்ணாதுரை தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

இயக்கத் தோழர்களும், உற்றார் உறவினர்களும் ஏராளமாக குழுமியிருந்தனர். தலைவர் முன்னுரைக்குப்பின், மண மக்கள் மாலை மாற்றிக் கொண்டனர். பிறகு மண மக்களைப் பாராட்டி தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி, ஈ. வி. கே. சம்பத், கோவில்பட்டி வள்ளிமுத்து, தூத்துக்குடி சிவசாமி, புவனகிரி சம்பந்தம் பேசினர் டி. கே. சீனுவாசன், விருத்தாசலம் முனிசாமி, தில்லை முத்தழகன், வாலாஜாபாத் டபிள்யூ. கே. தேவராசன், குடியேற்றம் பொன்னரசன், சென்னை அன்புப்பழம் நீ, மற்றும் பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். குறிஞ்சிப்பாடி தி. மு. க ஆதிமூலம், கு...ன், கடலூர் மா. எதிராஜன், வாலாஜாபாத் டபிள்யு. கே. தேவராசன் ஆகியோர்வாழ்த்திதழ்கள் அளித்தனர். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் ஒரு வாழ்த்துக் கவி அனுப்பியிருந்தார். ஏராளமாக வாழ்த்துத் தந்திகளும், கடிதங்களும் வந்தன.

மாலை 5 மணியளவில் சிதம்பரம் இசைவாணர் சி. எஸ். ஜெயராமன் அவர்கள் குழுவினருடன் இசை விருந்து நடந்தது.

சிறை சென்று திரும்பிய தி. மு. க. பொதுச் செயலாளரை, சென்னை எழும்பூரில் மக்கள் 6-10-50 மாலை வரவேற்ற காட்சி. தாங்கமுடியாத கூட்டம், ரயிலிலிருந்து இறங்கிய சி. என். ஏ. அவர்களை மலர் மாலைகள் சூட்டி வரவேற்கின்றனர். கூட்டத்தில் சிக்கித் திணறுகிறார்கள்!

(முன் பக்கத் தொடர்ச்சி)

சவுக்கில், எம். பட்டிலிங்கம் தலைமையில நடந்த பொதுக் கூட்டத்தில் அ. சு. நடராசன், எஸ் சின்னதுரை, பி. பாலசுந்தரம், டைரக்டர் ஏ எஸ். ஏ. சாமி பி. ஏ. (ஆனர்ஸ்) ஏ. கே. வேலன், கோபி. ஜி. என். ராசு, எஸ். ஏ. இராசமாணிக்கம் பேசினர்.

புதுக்கோட்டை:- 25—9—50-ல் அறிவிச் சொற்பயிற்சி மன்றம் சார்பில் ஆரு. மணி தலைமையில் நடந்த கூட்டத்தில் முகம்மது சாத்தான், அக்பர், இரா. சண்முகம், சிதம்பரம், முகம்மதுகனி, என். டி. வேலன் ஆட்சியாளரின் அடக்கு முறையைக் கண்டித்துப் பேசினர்.

மதுரை:— 18—9—50ல் பொதுச் செயலாளருக்கும், திராவிடர் கழகத் தலைவர் பெரியாருக்கும் அளிக்கப்பட்ட தண்டனை விவரம் தெரிந்ததும் தோழர்கள் எங்கு பார்த்தாலும் இந்த செய்தியை பரப்பியவண்ணமிருந்தனர். ரோடுகளிலும், சுவர்களிலும் இச் செய்தியை எழுதியிருந்தனர்.

24—9—50ல் நடிகவேள் எம். ஆர். ராதா வெள்ளைக் குதிரையிலேறி ஊர்வலத்திற்கு முன் செல்ல, கொட்டு மழையையும் பொருட்படுத்தாது ஊர்வலம் நடந்தது.

மாலை எஸ். முத்து தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் எம். அய்யாச்சாமி (தி. மு. க.) கே. எஸ். ராஜமான் (தி. மு. க.) கே. அய்யன் ராஜ் (சோஷலிஸ்ட்) கே. எஸ். சந்தானம் (சுயேச்சை ந. ச. உறுப்பினர்) என். எஸ். இளங்கோ (தி. மு. க.) நடிகவேள் எம். ஆர். ராதா (தி. க.) பேசினர்.

காங்கேயம்:— 20—9—50ல் எம். எஸ். பாரி தலைமையில் நடந்த தி. மு. க. செயற்குழுக் கூட்டத்தில் கண்டனம்.

வாணியம்பாடி:— 21—9—50ல் தன. இராமச்சந்திரன் தலைமையில் நடந்த இளங்கோ இலக்கிய மன்ற செயற் குழுக் கூட்டத்தில் கண்டனம்.

விக்கிரமசிங்கபுரம்:— 19—9—50ல் நடக்க இருந்த கூட்டத்தில் பொதுச் செயலாளர் கலந்துகொள்ள முடியாது, சர்க்கார் தண்டித்து விட்டதைக் கண்டித்து தி. மு. க. செயற்குழு கூடி தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

வடக்கநந்தல்:— 24—9—50ல் கண்டன ஊர்வலமும், விநாயத்தான் தலைமையில் பொதுக் கூட்டமும் நடந்தன. பாரியப்பன், கே. பி. நெடுமாறன் அடக்குமுறையை எதிர்த்துப் பேசினர்.

ஆம்பூர்:— 25—9—50ல் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை தலைமையில் என். ஜீவரத்தினம் அடக்குமுறையைக் கண்டித்துப் பேசினர்.

புதுப்பாளையம் (இராசை):— 21—9—50ல் இருசப்பன் தலைமையில் சேலம் கல்லூரி மாணவர் ந. முத்து, இளங்கோ, கே. வி. கே. இராமசாமி, சர்க்காரின் எதேச்சாதிகார போக்கைக் கண்டித்துப் பேசினர்.

திருநெல்வேலி:— 22—9—50ல் வெ. திருப்பாற்கடல் தலைமையில் நடந்த கண்டனப் பொதுக் கூட்டத்தில் எம். எஸ். சிவசாமி, இரா. சு. தங்கப்பழம், எஸ். நடராசன் பேசினர்.

சிதம்பரம்:— 24—9—50ல் தி. மு. க. சார்பில் இராம. பழனிச்சாமி தலைமையில் நடந்த 'திராவிட நாடு நாள்' விழா கூட்டத்தில் டி. கே. சீனுவாசன் பேசினர் சர்க்காரின் அர்த்தமற்ற அடக்குமுறை பாய்ச்சலைக் கண்டித்தார். சக்கிரவர்த்தி நன்றி கூறினர்.

கல்லிடைக் குறிச்சி:— 27—9—50ல் தி. மு. க. சார்பில், எஸ். நடராசன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் எம். எஸ். சிவசாமி, இரா. சு. தங்கப்பழம் பேசினர்.

செல்வபுரம் (கோவை) 27—9—50ல் நடந்த தி. மு. க. செயற்குழுக் கூட்டத்தில் கண்டனம்.

சேலம்:— 23—9—50ல் நாராயணசாமி முன்மொழிய ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில் நடந்த கண்டனக் கூட்டத்தில் என். எஸ். கே. குழுவைச் சேர்ந்த கே. ஆர். செல்லமுத்து அடக்குமுறைகளை கண்டித்து பாடல்கள் பாடினர். இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., சி. பி. சிற்றரசு, மு. கருணாநிதி, கண்ணதாசன், ஆசைத்தம்பி, சித்தையன் பேசினர்.

நாகர்கோவில்:— 22—9—50 தோழர் வி. எம். ஜான் தலைமையில் கோட்டார் மஜேகான் அதிராம்பட்டினம் என். எஸ். இளங்கோ பேசினர்.

திருப்பத்தூர்:— 27—9—50 தோழர் இளம்பிறை தலைமையில் தோழர் என். வி. நடராசன் பேசினர்.

கம்பம்:— 25—10—50 தி. மு. க. கமிட்டியின் கண்டனம். தோழர் எம். வி. ராஜ் தலைமை தாங்கினர்.

நிலக்கோட்டை:- 1—10—50ல் சர்க்கார், தம் தவறையுணர்ந்து பொதுச்செயலாளரையும், பெரியாரையும் விடுதலைசெய்ததை பாராட்டிப் பட ஊர்வலமும், சு. பால் பாண்டியன் தலைமையில் கூட்டமும் நடந்தன. அப்துல் காதர், நடராசன், ராஜாராம் பேசினர்

தாரமங்கலம்:— 1—10—50ல் தலைவர்களை விடுதலை செய்ததை பாராட்டி, சைக்கிள் ஊர்வலமும் இராமச்சந்திரன் தலைமையில் பொதுக் கூட்டமும் நடந்தன. வேலாயுத தாசன் பேசினர்.

(தொடரும்)



எங்கள் நன்றி

எங்கள் திருமணத்துக்கு வந்திருந்தும் வாழ்த்துகள், பரிசுகள் அனுப்பியும் எங்களைப் பெருமை படுத்திய அன்பர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பா. விசாலாட்சி
இரே. இளம்வழுதி

மு. கருணாநிதி சுற்றுப் பயணம்

14—10—50 ஆம்பூர்
15—10—50 வேலூர் (காலை: தி. மு. க. ஆண்டு விழா. மாலை: பொதுக்கூட்டம்
16—10—50 திருவத்திபுரம்
17—10—50 திருவண்ணாமலை

புதிய வெளியீடு

அண்ணாவின்
ஆறு சிறுகதைகள் ரூ 1 0 0

மற்றும்

ரோமாபுரி ராணிகள்	2	4	0
கம்பரசம்	1	8	0
அறப்போர்	1	0	0
1858—1948	1	0	0
குமரிக்கோட்டம்	1	0	0
கற்பனைச் சித்திரம்	1	0	0
சிறு கதைகள்	1	0	0
ஆரியமாயை	1	0	0
உலகப் பெரியார்	1	0	0
ஜமீன்—இனும் ஒழிப்பு	1	0	0
பணத் தோட்டம்	1	0	0
தீ பரவட்டும்	1	0	0
வர்ணாஸ்ரமம்	0	12	0
ரேடியோவில் அண்ணா	0	12	0
நிலையும் நினைப்பும்	0	12	0
தாழ்ந்த தமிழகம்	0	8	0
மே தினம்	0	5	0
மொழிப் போராட்டம் (இரா. நெடுஞ்செழியன்)	1	0	0

அடுத்த வெளியீடுகள்
இரத்தக் கண்ணீர்
(மு. கருணாநிதி)
விஷப் புயல்
(இராம. அரங்கண்ணல்)

கிடைக்கும் இடம்:—
திராவிடப் பண்ணை
தெப்பக்குளம் P. O.
(Ad) திருச்சிராப்பள்ளி

சென்னை மாவீரரே, செயலில் இறங்குவீர்!

24-10-50 ஆச்சாரியார் சென்னை வருகிறார்

தமிழர்களைச் சிறையிலே தள்ளியவர்!

★

தடியடிக்கு நம்மை ஆட்படுத்தியவர்!

★

திராவிடத்தை - வடநாட்டுக்கு அடகு வைப்பவர்!

★

ஆ
ச்
சா
ரி
யா
ர்

தாலமுத்து - நடராசனை பிணமாக்கித் தந்து பெருமைகொண்டவர்!

★

பெரியாரை 'பெல்லாரி' சிறையில் போட்டவர்!

★

இந்தி ஆதிபத்யத்தின் காவலர்!

★

நம் வாழ்வு சிக்கிச் சிதைய ஆதரவு அளிப்பவர் வருகிறார்!

காட்ட வாரீர், கருப்புக் கொடி!

பொன்னான சந்தர்ப்பம்! புரியச் செய்வோம் நம் அதிருப்தியை!!

24–10–50 செவ்வாய்	காலை: கோட்டைக்கு அருகில்! மாலை: இராயப்பேட்டையில்!

எல்லோரும் காட்டுவோம் கருப்புக் கொடி!!

3-ம் பக்கத் தொடர்ச்சி

ஆனல், திருச்சி ஏன் திருச்சிராப்பள்ளியாயிற்று? Madura என்று இருந்ததை மதுரை என்று மாற்றியிருக்கிறார்களே — அது ஏன்? Park ஸ்டேஷன் பூங்கா என்று தனித் தமிழ் பெயராக ஆக்கப்பட்டிருக்கிறதே என்ன அர்த்தம்? Fort—கோட்டையாக்கப்பட்டிருப்பதற்கு என்ன பொருள்?

ஆட்சியாளர் செய்திருக்கும் இந்த மாற்றத்தின் பொருள் என்ன? இதுமட்டும் இருக்கலாம்—இதைப்போல எமது நண்பர்கள் பெயர்களை மாற்றினல் கூடாது!—கூறுகிறார். வேடிக்கையான போக்கு!

நல்லெண்ணத் தூது கோஷ்டியின் முயற்சி பலிக்காது என்பதே, எனது எண்ணம்.

இத் தூதுக் கோஷ்டி, வடக்கேயிருந்து இங்கு ஏன் வந்தது?

நாம் இந்தி எதிர்ப்பு நடத்திய பொழுது 'இதுகளால் என்ன முடியும்?' என்று கேலி பேசினார்! நாலு பேர் நின்றுகொண்டு 'தமிழ் வாழ்க' என்று கூச்சல் போடுகிறார்கள் என்பதாக கேலி பேசினர். இன்று என்ன நடைபெறுகிறது? இதுகளுடன் சமரசம் பேச அதுகள் வருகின்றன!

இப்போது வந்திருப்பது நல்லெண்ணத் தூது கோஷ்டி. இதற்கு அடுத்தபடி மார்வாடி நல்லெண்ணத் தூது கோஷ்டி வரும். அடுத்தபடி வடநாட்டு டெல்லியிலிருந்து நல்லெண்ணத் தூது கோஷ்டி வரலாம்.

இதுபோன்ற வடக்கத்தித் தூது கோஷ்டிகள் வந்தபடி இருக்கும் நாம் வளர வளர!

ஆகவே நாம் வளரவேண்டும். நமது இலட்சிய கீதத்தை எங்கும் எழுப்பவேண்டும்.

'திராவிட நாடு' என்பதெல்லாம் வெறும் பேச்சு. ஒருக்காலும் கிடைக்கப் போவதில்லையென சொல்கிறார்களாம், பல காங்கிரஸ் பிரமுகர்கள், இப்படித்தான், பாகிஸ்தான் கேட்டபோதும் கடைசி வரை பிடிவாதம் பேசினார்கள்!

திராவிட நாட்டுப் பிரச்சினை பிரித்துவாங்குவது அல்ல—இழந்த நாட்டை மீட்டுக் கொள்வது!

பாகப் பிரிவினையல்ல — பிச்சை வாங்குவது அல்ல! நாம் ஏமாந்து இழந்த தாய் நாட்டை மீட்பது!

இதைப் புரிந்துகொள்ளவேண்டும் தேசியத் தலைவர்கள். ஆத்திரத்தை, சிறிது அப்புறப் படுத்திவிட்டு நாம் கூறுவதைச் சிந்திக்கவேண்டும்.

பர்மா, முன்பு இந்தியாவுடன் இணைக்கப் பட்டிருந்த பிரதேசம் தான். பின்னர் துண்டிக்கப் பட்டு, இப்போது தனி நாடாக சுதந்திரத்துடன் வாழவில்லையா?

இங்குள்ள பக்தவத்சலங்களும், காமராஜர்களும் கேட்கிறார்கள், சிறு நாடாக இருந்தால் முடியுமா என்று. இவர்களை நான் கேட்கிறேன், இவர்கள் என்ன ஆசியாக் கண்டத்துக்கா அதிபதிகளாக இருக்கிறார்கள்?

ஒன்றுமட்டும் நான் சொல்லமுடியும். இவர்கள் மீது நமக்குக் கோபமில்லை. இன்னும், தெளிவாகச் சொன்னல் இவர்களுக்காகவும் நாமே போராடிக்கொண்டிருக்கிறோம். இவர்களுடைய எதிர்காலம் மோசமானல், உதவப் போவது நாம்தான்! கோவலனுக்கு கடைசி நேரத்தில் காற்சிலம்பைத் தந்து உதவியது கண்ணகிதான்—மாதவியல்ல!!

இங்குள்ள தேசியப் பிரமுகர்களுக்கு வடநாட்டிலிருக்கும் மதிப்பைத்தான் நாள்தோறும் நாம் கண்டு வருகிறோமே! நாசிக்கிலே நடைபெற்ற காங்கிரசுக்குப் பிரதிநிதியாகச் சென்ற காங்கிரஸ் மந்திரிகள் என்ன பேசினர்? வாயைத் திறந்து நாட்டின் நிலைமையை எடுத்துச் சொன்னார்களா? சொல்லத்தான் முடிந்ததா?

ஏன் இவர்கள் பேசவில்லை? இவர்கள் வீரம் எங்களை மிரட்டத்தானா? எதற்கெடுத்தாலும் ஓடுகிறாயே, டெல்லிக்கு! அதைக் காண எங்களுக்கே வெட்கமாயிருக்கிறதே!

நமது முன்னோர்கள் வாள்கொண்டு வாழ்ந்தார்கள்—நாங்கள் அறிவை ஆயுதமாகக் கொண்டு விட்டோம்!

திராவிட நாடு ஏற்பட்டுவிட்டால் "என்ன செய்வாய்?" என்று கேட்கின்றனர். எல்லாம் செய்வோம்—நாடு முன்னேற்றத்துக்கான எல்லாம் செய்வோம்!

நாடு எப்படி ஆளப்படவேண்டும் என்பது தெரியும்! சுகமும் நலமும் நாட்டில் நிலவச் செய்ய முடியும்! வழியும் வகையும் உண்டு! அந்த இலட்சியத்துக்கு வெற்றி காணும் வகையில் உழைப்போம்! தியாக முத்திரைகளோடு உழைத்து வெற்றி காண்போம்!! (கிருபர்)

சி. ஆர்.

மத்திய சர்க்காரில் வேலையில்லா மந்திரியாகஇருக்கும் திரு. சி இராசகோபாலாச்சாரியார் 19—10—50 அன்று டில்லியிலிருந்து சென்னைக்கு வந்துவிட்டு — அங்கிருந்து திருப்பதி, பெங்களூர், மைசூர் முதலிய இடங்களுக்குச் செலகிறார்.

மீண்டும் 24—10—50 சென்னைக்குத் திரும்புகிறார்.

24—10—50 செவ்வாய்க்கிழமை காலை சென்னை கோட்டைக்கு அருகாமையிலும், அன்று மாலை இராயப்பேட்டையிலும் திராவிட முன்னேற்றக்கழக கோயில்பட்டி தீர்மானத்தை யொட்டி, கருப்புக்கொடிகள் காட்டி, நமது உரிமை வேட்கை உணர்த்தப்படும்.

Edited Printed & Published by C. N. Annadurai M A at Dravida Nadu" Press 95, Tirukkachinambi Street Kancheepuram